
# பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை





## மாத இதழ்

மலர் 14

இதழ் : 1

மே 2013

# நீதிமான்களின் ஜெபத்தையோ (கர்த்தர்) கேட்கிறார்



நீதி. 15:29



# உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த வருடத்தின் 5 —ம் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறார். கடந்த மாதம் நடந்த ஒவ்வொரு ஆராதனைகளிலும், சபையின் ஊழியங்களிலும் தேவ பிரசன்னத்தை உணர முடிந்தது. விஷேசமாக முழு இரவு ஜெபம், அறுப்பின் பண்டிகை, ஞானஸ்நான ஆராதனை, வேத பாட வகுப்புகளிலும் தேவ வழி நடத்துதலை உணர முடிந்ததற்காய் தேவனுக்கு ஸ்தோத்திரம். இந்த மாதத்திலும் நடக்கவிருக்கும் சபை ஆராதனைகள் மற்றும் சபை ஊழியங்களுக்காய் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கடந்த மாதத்தில் உலகத்தின் பல பகுதிகளில் பூமி அதிர்ச்சி, நில நடுக்கம் என கேள்விப்பட்டோம். அதின் அறிகுறிகளை குவைத்திலும் உணர முடிந்தது. **""அவர் வாசலருகே வந்திருக்கிறார்""** (மத். 24:33). அத்திமரம் இஸ்ரவேலுக்கு உவமையாக சொல்லப்பட்டிருக்கிறது. 5.5.1948 —ம் ஆண்டு இஸ்ரவேல் ஒரு தேசமாக உருவாகிற்று. அப்போதே இயேசு வாசலருகே வந்து விட்டார் என்று வேதம் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம். இப்போது நாம் இருக்கும் 2013 —ம் ஆண்டு ஆண்டவர் மிக அருகில் இருக்கிறார் என்று அர்த்தம். அதனால் தான் இந்த அறிகுறிகளை நாம் பார்க்கிறோம். இயேசுவை சந்திக்கும் ஆசையில் நாம் ஒவ்வொரு நாளும் காத்திருக்க வேண்டும். அவர் வரும்போது பிடிபட்டு விடுவேனோ என்று பயத்துடன் வாழாமல் பாவத்தை வெறுத்து எப்போதும் அவரை சந்திக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

1. இயேசுவை சந்திக்கும் போது நம்முடைய விளக்கு (இரட்சிப்பு) எரிந்து கொண்டிருக்க வேண்டும் (மத். 25:1—12). வெளிப்பிரகாரமான வாழ்க்கை ஒருவேளை பார்ப்பதற்கு பரிசுத்தம் போல் இருக்கலாம். வேத வாசிப்பு, ஜெபம், ஊழியம் இவைகள் வெளிப்பிரகாரமான வாழ்க்கை. ஆனால் உள்ளான (அந்தரங்க) வாழ்க்கையில் பரிசுத்தம் இல்லையென்றால் அவர் வரும்போது இரட்சிப்பு அணைந்து விடும். நாம் சேர்க்கிற பணம், நிலம், அந்தஸ்து இவைகள் இயேசுவின் வருகையில் நம்மை இரட்சிப்புள்ளவர்களாய் மாற்ற முடியாது. என் நாமத்தினிமித்தம் எவைகளை இழப்பீர்களோ அவைகளை நூறத்தனையாய் இம்மையிலும் மறுமையிலும் நித்திய ஜீவனையும் பெற்றுக் கொள்வீர்கள் என்று இயேசு சொல்லி இருக்கிறார். ஆதி அப்போஸ்தலர் நாட்களில் இயேசுவுக்காய் எதையும் இழக்கத் தயாராக இருந்தார்கள், அநேகர் இழந்தார்கள்.

2. இயேசு வரும்போது நம்முடைய தாலந்துகளுக்கு கணக்கு கொடுக்க வேண்டும் (மத். 15:15—30). நமக்கு நேரம், பெலன், ஐசுவரியம் தேவன் கொடுத்திருக்கிறார். நாம் இவைகளை எதில் எதில் பயன்படுத்தினோம் என்று கணக்கு கொடுக்க வேண்டும். ஒரு தாலந்தை வாங்கினவன் பூமியில் (நிலத்தில்) புதைத்தான். மற்றவர்கள் சரியாய் பயன்படுத்தினார்கள். நிலத்தில் புதைத்தல் என்பது பூமிக்குரிய வாழ்க்கைக்கு

அல்லேலூயா; கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது. –சங். 106:1

எல்லாவற்றையும் செலவு பண்ணுவது. மிகப் பெரிய ஊழியம் செய்கிறேன் என்று இருப்பவர்கள் கூட அவர்களிடம் உள்ள வரங்களை, கிருபைகளை பூமிக்குரிய வாழ்க்கைக்காய் செலவு பண்ணுவது உண்டு.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! உங்களுடைய (இரட்சிப்பு) உள்ளான வாழ்க்கை எப்படியுள்ளது! தேவன் கொடுத்தவைகளை என்ன செய்கிறோம்! இன்று இயேசு வருவார் என்றால் என்ன வெகுமதி அல்லது எப்படி நம்மைப் பார்த்து அழைப்பார்! மத். 25:34 –ல் உள்ளபடியான பாக்கியத்தைப் பெற நம்மை ஆயத்தப்படுத்துவோம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**

## புகலிடம்




பாவங்கள் பரிகாசம் செய்யும் போதும்
பலவீனம் தாக்கி நாம் வீழும் போதும்
பரிதாப சூழ்நிலையில் கலங்கும் போதும்
பதறாதே என்றழைக்கும் இயேசுவே புகலிடம்

பணக்கஷ்டம் வறுமைநமை வாட்டும் போதும்
பதறியே தனிமையில் நாம் வாடும் போதும்
பரிகசிக்கும் பகைவர் நம்மை சூழும் போதும்
பிரியமாய் அரவணைக்கும் இயேசுவே புகலிடம்

பாதை தெரியாமல் நாம் தவிக்கும் போதும்
பிரச்சனைகள் தலைக்குமேல் உயரும் போதும்
பிணிகள் தாக்கி உள்ளம் சோரும் போதும்
பாசமாய் தேற்றிடும் இயேசுவே புகலிடம்

பிரளயமாய் பாடுகள் விதவிதமாய் வரும் போதும்
பிந்தாமல் தஞ்சம் தந்து ஆற்றி தேற்றுவார்
பிசாசின் சூழ்ச்சிகள் எத்தனை சூழ்ந்தாலும்
பூரணமாய் வெற்றி தரும் இயேசுவே புகலிடம்

பாரினில் நாம் வாழும் நாட்கள் அத்தனையும்
பிரியாமல் நம்மோடு என்றென்றும் நடந்திடுவார்
பிராணன் போய் ஜீவகாலம் நிறைவுறும் வேளையில்
பரலோகம் தஞ்சம் தரும் இயேசுவே புகலிடம்.

**சகோ- ஸ்டாலின்**

கொந்தளிப்பை அமர்த்துகிறார்; அதின் அலைகள் அடங்குகின்றது. -சங். 107:29

தேவ செய்தி

# என் ஜெபத்தைக் கேட்கிறார்



தேவனுக்கே மகிமை உண்டாவதாக. நம் ஜெபம் கேட்கப்படுகிறதா? எனக்கன்பான தேவ ஜனமே! ஜெபம் என்பது தேவனை சந்திக்கும் ஒரு களம். தேவஉறவினை உண்மை என்று நிரூபிப்பது ஜெபமே. நாம் ஜெபிக்க செல்கின்றோம் என்றால் தேவனை சந்திக்க செல்கிறோம். அவரோடு பேசப்போகிறோம். அவருடைய அன்பை ருசிக்கப் போகிறோம். அவருடைய பிரசன்னத்தை உணரப் போகிறோம் என்பது போன்ற உணர்வுகளும் எண்ணங்களும் நமக்கு வேண்டும். **““என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது””** (செய்ய முடியாது) (யோவா 15:5) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். ஆகவே நம்மால் எதுவும் செய்ய முடியாது என்ற நமது இயலாமையை ஒப்புக் கொண்டு, இயேசு கிறிஸ்துவோடு ஒரு உறவை உருவாக்கி, அவரோடு ஐக்கியப் படுவதே ஜெபம்.

பரி.பவுல் **““தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்””** (1கொரி 1:9) என்று அந்த ஐக்கியத்தைத் தெளிவு படுத்துகிறார். ஜெபத்தின் மூலமாகவே அந்த ஐக்கியத்தை தெளிவு படுத்துகிறார். ஆகவே ஜெபம் நம்முடைய வாழ்க்கையில் உயிர் நாடியாக இருக்கிறது. ஜெபம் இல்லாத வாழ்க்கை, வெறுமையான வீண் வாழ்க்கையே. ஜெபம் பரலோக ஆசீர்வாதங்களை அள்ளித்தருகிறது. தடைகளை தகர்க்கிறது, தோல்விகளை ஜெயமாக்குகிறது, கோணலானவைகளை செவ்வையாக்குகிறது, இருளை வெளிச்சமாக்குகிறது, குறைவுகளை நிறைவாக்குகிறது.

அன்பு தேவ ஜனமே! நம் ஜெபமே முழு உலகத்தையும் அசைக்கக்கூடிய மிகப் பெரிய வல்லமையான ஆயுதமாக உள்ளது. ஆனால் நம் ஜெபத்தை தேவன் கேட்பதற்கு நம்முடைய பகுதியில் நாம் எவ்வித தகுதிகளை உடையவர்களாயிருக்க வேண்டும் என்பதை நாம் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். **““நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்””** என்கிறார் (ஏசா1:15). ஆகவே தேவன் நம் ஜெபத்தைக் கேட்க ஆவலாய் இருக்கும்போது நாம் எவ்வித தகுதிகளை உடையவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறாரோ அவற்றை நாம் நிறைவேற்றுவோமாக! வேதத்திலே முக்கியமாக ஐந்து கூட்டத்தாரின் ஜெபத்தை தேவன் கேட்கிறார் என்று கூறப்பட்டுள்ளது.

**1. திக்கற்றவர்களின் ஜெபத்தை (சங் 102:16):—** நம் தேவன் திக்கற்றவர்களின் தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்கு சகாயர் நீரே! என்று தாவீது கூறுகிறார் (சங்.10:44). **““நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்””** (யோ.14:18) என்றே நமக்கு வாக்குரைத்துள்ளார். எல்லோராலும் கைவிடப்பட்டு, திசையறியாமல், தயங்கி நிற்கும் மக்களுடைய ஜெபத்தை கர்த்தர் கவனித்துக் கேட்கிறவராய் இருக்கிறார். எனக்கு உதவி செய்யவும், ஒத்தாசைப் பண்ணவும் யாருமே இல்லையே என்று நீங்கள் இருக்கிறீர்களா? கவலைப் பட்டு கலங்க வேண்டாம் உங்கள் ஜெபத்தை கேட்க உங்களை சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தர் ஆவலாக உள்ளார். ஆகார் தன் குமாரன் இஸ்மவேலோடு தண்ணீரின்றி பெயர்செபாவின் வனாந்தரத்தில் திக்கற்றவர்களாய் அலைந்து திரிந்தபோது, திக்கற்ற அவளுடைய

இக்கட்டில் எங்களுக்கு உதவிசெய்யும்; மனுஷனுடைய உதவி விருதா. –சங். 108:12

கூக்குரலின் சத்தத்தைக் கேட்ட தேவன் தண்ணீர் துரவைக்காண செய்து, அவளையும் அவள் குமாரனையும் காப்பாற்றினார். அதே தேவன் இன்றைக்கு நம் எல்லோருக்கும் ஒத்தாசை செய்கிற சமயத்திற்கேற்ற சகாயர்.

**2. நீதிமான்களின் ஜெபத்தை (நீதி 15:29):—** நீதிமான்களின் ஜெபத்தையோ கர்த்தர் கேட்கிறார். **""கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது""** (சங். 34:15). யாக்கோபு அப்போஸ்தலனும் நீதிமானின் வேண்டுதலை பற்றி கூறும்போது **""நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கிறது""** (யாக். 5:16) என்றே கூறுகிறார். நம் தேவன் நீதிமான்களின் ஜெபத்தைக் கவனித்துக் கேட்கிறவராயிருக்கிறார். **""நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்""** (சங். 34:17). தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை தப்புவித்து கொண்ட நோவா, தானியேல், யோபு என்ற மூன்று நீதிமான்களை குறித்து எசே. 14:14, 18, 20—ல் வாசிக்கிறோம். நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானாயிருந்தபடியால் அவன் விண்ணப்பத்தைக் கேட்டு தேவன் அவனையும் அவன் குடும்பத்தாரையும் ஜலப்பிரளயத்தினால் அழிந்து போகாதபடி காப்பாற்றினார் அல்லவா. தானியேல் எந்த ஒரு நீதிகேடும் செய்யாத நீதிமானயிருந்தபடியால் சிங்கங்கள் சேதப்படுத்தாதபடி தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயை கட்டி போட்டாரல்லவா. யோபு ஒரு நீதிமானாய் இருந்தபடியால் எல்லாவற்றையும் இழந்து, சாத்தானால் சோதிக்கப்பட்டபோதும் கர்த்தர் அவன் விண்ணப்பத்தைக் கேட்டு அவன் சிறையிருப்பை மாற்றினார் அல்லவா. அதே தேவன் நம்மையும் அழிவிலிருந்து காக்க, சோதனையினின்று தப்புவிக்க, சாத்தானின் தாக்குதலினின்று விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.

**3. செம்மையானவர்களின் ஜெபத்தை (நீதி 15:8):—** கர்த்தருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது (சங்.11:7). **""செம்மையான இருதயம் உள்ளவர்களை இரட்சிக்கிற தேவன்""** (சங்.7:10). செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சத்தை உதிக்கச் செய்கிற தேவனே நம் தேவன் (சங் 112:4). அன்பு தேவ ஜனமே! நாம் நம் வார்த்தையில், செய்கையில், இருதயத்தில், சுபாவங்களில் செம்மையானவர்களாயிருந்தால் தேவன் நம் ஜெபத்தைக் கேட்பது நிச்சயம். வேதத்தில் நாம் எசேக்கியா ராஜாவைக் குறித்து பார்க்கும்போது **""அவன் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தான்""** என்று அவனை குறித்து வாசிக்கிறோம் (2இரா 18:2, 2நாளா 29:2). ஆகையால் அவனுக்கு மரணத்துக்கேதுவான வியாதி வந்தபோதிலும் அவன் விண்ணப்பத்தை கேட்ட தேவன் அவனுடைய ஆயுசு நாட்களில் 15 வருடத்தைக் கூட்டி கொடுத்தார் (1 இரா 20:3—6). மற்றொரு சந்தர்ப்பத்தில் அவன் கிருபையுள்ள கர்த்தர் ஜனங்களை மன்னித்து அனுகூலம் செய்யும்படி விண்ணப்பம் செய்கிறபோது கர்த்தர் எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்டு ஜனங்களுக்கு அனுகூலம் செய்தார் என்று கூறப்பட்டுள்ளது (2நாளா 30:20). அன்பு தேவ ஜனமே! நாம் செம்மையானவர்களாயிருந்தால், நாம் கூப்பிடும் வேளைகளில் எல்லாம் நம் தேவன் நம் விண்ணப்பத்தைக் கேட்டு நம் இருதயத்தின் வேண்டுதல்களை எல்லாம் நமக்கு அருள் செய்வார். மட்டுமல்ல நம் விண்ணபத்தைக் கேட்டு பிறருக்கும்

அனுகூலம் செய்வார். செம்மையாய் ஜீவித்த எசேக்கியாவின் விண்ணப்பத்தைக் கேட்ட அதே தேவன் நம் தேவனல்லவா? செம்மையாய் நடக்கிறவனுக்கு என் வார்த்தைகள் நன்மை செய்யாதோ? (மீகா- 2:7) என்று நம் தேவன் கேட்கிறார். செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும் என்ற வசனத்தின்படி நம் வம்சமும் ஆசீர்வதிக்கப்படும்.

**4.எளியவர்களின் விண்ணப்பத்தை (சங் 69:33): —** கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார். ஆங்கில வேதாகம மொழி பெயர்ப்பில் "For the Lord heareth the poor" என்று எழுதப்பட்டிருக்கிறது. அதாவது கர்த்தர் ஏழைகளின் விண்ணபப்பத்தை கேட்கிறார். தாவீது தன் அனுபவத்தில் கூறும்போது ""**இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு அவனை அவன் இடுக்கண்களுக்குகெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்**"" (சங் 34:6) என்றே கூறுகிறார். ஆகவே நான் ஏழை எளியவனாயிருக்கின்றேன் என்று நீங்கள் ஏங்க வேண்டாம். ஏனென்றால் உங்கள் அங்கலாய்ப்புகளை அறிந்திருக்கிறவர் உங்கள்ஹ வேதனைகளை அறிந்திருக்கிறவர், உங்களுக்கு சமீபமாய் உங்கள் வேண்டுதல்களை கேட்க ஆவலாய் உள்ளார்.

**5.சிறுமைப்பட்டவர்களின்வேண்டுதலை (சங்10:17): —** கர்த்தாவே சிறுமைப் பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர். சிறுமைப்பட்டவனுக்குகர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார் (சங் 14:6). ""**சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்**"" (சங் 9:12). நம் தேவன் இயேசுவும் சிறுமைபட்டவரென்று எண்ணப்பட்டவரே (ஏசா 53:4). வேதத்தில் அன்னாளைக் குறித்து நாம் பார்க்கும்போது கர்த்தர் அவளு டைய சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து அவளுடைய வேண்டுதலைக் கேட்டு அவளுக்கு ஒரு ஆண் பிள்ளையை தந்தருளினார். ஆகவே நம் தேவன் நம் சிறு மையை கண்ணோக்குகிற தேவன். அன்னாளை சிறுமைப்படுத்த ஒரு பெனின்னாள் இருந்தது போல உங்களையும் தங்களின் வார்த்தைகளாலும், சொல்களாலும் சிறுமைப்படுத்த சிலரை தேவன் அனுமதித்தார். அப்படிப்பட்ட வேளைகளில் நீங்கள் சோர்ந்து போக வேண்டாம். நீங்களும் அன்னாளைப் போல உங்கள் இருதயத்தை தேவ சமூகத்தில் ஊற்றி ஜெபம் பண்ணுங்கள். தேவன் அன்னாளுக்கு தந்த ஆண் பிள்ளை என்பது உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் கர்த்தர் உங்களுக்கு தரப்போகிற ஜெயத்தை காண்பிக்கிறது. நீங்கள் உங்கள் சூழ்நிலைகளைப் பாராதபடி தேவனை நோக்கிப் பாருங்கள். ஜெயத்தை கொடுப்பவர் அவரே.

அன்பு தேவ ஜனமே! நம் ஜெப விண்ணப்பங்களைக் கவனமாய் கேட்டு பதில் செய்கிறவர் நம் அருகாமையில் அதரிசனமான தேவனாய் நம்மோடு கூடவே இம்மானுவேலாய் இருக்கிறார். எனவே நம் விசுவாசத்தை கட்டியெழுப்பிக் கொண்டு சோர்ந்து போகாமல் எல்லா சந்தர்ப்பத்திலும் அவரையே நோக்கிக் கூப்பிடுவோமாக. அவரே நமக்கு உத்தரவு கொடுத்து நாம் அறியாததும் நமக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை நமக்கு அறிவிப்பார். ஜெபத்தைக் கேட்கும் நம் தேவன் ஜெயம் தந்து உயர்த்துவார். நீங்கள் உயர்த்தப்படுவது உங்களின் ஜெபத்தின் உயர்வைப் பொறுத்ததே. ஆமென். அல்லேலூயா!

**Rev. Y. ஜாண்றோஸ்**
**நாகர்கோவில்**

# துதியும் கனமும் நம் தேவனுக்கே

குவைத் நாட்டில் ஆண்டவருடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்க்கைளைக் கண்டு பிரமித்து நின்றேன். பரிசுத்த பவுலடியாரின் பெயரால் உருவாக்கப்பட்ட அஹமதி திருச்சபையின் ஆராதனையையும் அனல் உண்டாக்கும் WORSHIP- ஐயும் மகிமை நிறைந்த பாடல்களையும் கண்டு என் ஆண்டவருக்கு கோடான கோடி ஸ்தோத்திரத்தை ஏறெடுத்தேன். சொந்த நாட்டைவிட்டு, குடும்பத்தைவிட்டு, உறவுகளைவிட்டு வேலை நிமித்தமாக இங்கு வந்திருக்கும் ஆண்டவருடைய பிள்ளைகளுக்கு இங்குள்ள நம் இந்திய மக்கள் காட்டும் அன்பிலும் நேசத்திலும் அவர்கள் காட்டும் ஆவிக்குரிய வாழ்க்கையின் பிரகாசத்தைக் கண்டு ஆண்டவருடைய பிள்ளைகளோடு ஐக்கியமாகிவிடுகிறார்கள். இதுதான் உண்மையான தேவ அன்பு. இது நமது திருச்சபையில்தான் உருவா கிறது. ஆராதனை முடிந்து வெளியே வரும் ஆண்டவருடைய பிள்ளைகள் கேட்ட சத்தியங்களை தங்கள் அன்பிலும், ஐக்கியத்திலும், கிரியையிலும் வெளிப்படுவதையும் கண்டு ஆண்டவருக்கே துதியும் கனமும் செலுத்தினேன். இப்படி ஆண்டவருடைய பிள்ளைகளை உருவாக்கிக் கொடுத்திருக்கின்ற நமது திருச்சபையை ஆண்டவருடைய கரத்தில் வைத்து நன்றியோடு ஸ்தோத்தரித்தேன்.

**கர்த்தரின் அன்பில்**
Sis. **கல்யாணி டேனியல்**
**(சகோ. ஜாண்வெஸ்லியின் அம்மா)**

---




# புத்தகம்

வாழ்க்கை ஒரு உயர்ந்த புத்தகம்
—அதில்
முதல் பக்கம் — கருவறை
கடைசி பக்கம் — கல்லறை
இடையில் உள்ள பக்கங்களை...
இயேசு இரட்சகரின் துணையால்
புன்னகையில் எழுதிடு.
கண்ணீரினால் கசக்கிவிடாதே.

**- லிடியா ஆ. தாஸ்**

---

**வாழைப்பழம்**

# பழம் சாப்பிடுங்க

கல்லீரல் வீக்கத்தைக் குறைக்கும். உடலின் வெப்பத்தைக் குறைத்து குளிர்ச்சியைக் கொடுக்கும். மலச்சிக்கலைப் போக்கும். இரும்புச்சத்தும் மிக்கது.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

# ANSWER FOR THE QUIZ (APRIL)

| | |
|---|---|
| 1. Immanuel – God is with us | – Matt. 1:23 |
| 2. Jeremiah | – Matt. 2:17 |
| 3. John the Baptist | – Matt. 3:1 |
| 4. For they shall see God. | – Matt. 5:8 |
| 5. Jesus marvelled at the centurious faith. | – Matt. 8:10 |
| 6. Matthew | – Matt. 9:9 |
| 7. Eye | – Matt. 6:22 |
| 8. For all that labour and are heavy laden who come to Jesus. | – Matt. 11:28 |
| 9. The son of man. | – Matt. 12:40 |
| 10. Peter | – Matt. 14:29 |

## QUIZ FOR CHILDREN

(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1. What did God command?
2. To whom did Jesus say that upon this rock I will build my church?
3. The son of man has come to save that which was _______.
4. Whom did Jesus take upon a high mountain?
5. Who came to you in the way of righteousness?
6. What kind of faith ye shall have to say unto this mountain, remove hence to yonder place?
7. There is none good but one that is ___________.
8. Whose is this image and superscription?
9. Who came to see the sepulchre?
10. Where was He sitting when the disciples came unto Him privately?

**Note:- ANSWERS can be taken from Matthew 15 to 28. Submit your answers to the Sunday School Teachers on or before 24.05.2013. Please mention the reference along with the answers.**

துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்: அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும். -சங். 112:7

## துக்க முகம்




அலங்கம் இடிபட்டு
அரக்கர் குடியேறியபின்...
சுகங்கள் சூரையாடப்பட்டு
இல்லங்கள் தரைமட்டமானபின்...
தேவனின் பிரியஸ்தானம்
புற தேசத்தாரின் தெருவானபின்...
அடைக்கப்பட்ட தோட்டம்
கால்நடை மேய்ச்சலாக்கப்பட்ட பின்...
கர்த்தரின் கன்னி திருச்சபையை
கயவர்களின் கை ஆளத்துடிக்க...
சிற்றாரும் உற்றாரும்
கொள்ளையர்கள் குத்தகையாக்கியபின்...
பரம எருசலேமுக்கு உரியவள்
பரதேசியாக விடப்பட்டு...
பாபிலோனில் பசியானபின்
பறந்த வீதியில் தலைவிரிக்கோலம் கொண்டிருக்க...
வேதாகமம் ஒதுக்கப்பட்டு
பொய்யர் வாக்கு மேன்மையாக்கப்பட்டு...
சத்திய போதனை விலக்கப்பட்டு
புளித்த மாவு அரியணை அமைந்தபின்...
நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி!

**- செல்வகுமார்**

---

## சிரி.... சிந்தி

ஆவி – 1: விஷம் குடிச்சி சாகப்போனேன். விஷத்துல கலப்படம் பிழைச்சிட்டேன்.

ஆவி – 2: அப்புறம் எப்படி செத்த?

ஆவி – 1: காப்பாத்த மருந்து தந்தாங்க... மருந்துல கலப்படம் செத்துட்டேன்.

**- அஹமதி தமிழ் திருச்சபை**

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

- செல்வி. ஹெலன் கிறிஸ்டோபர்
- செல்வி. ஏஞ்சலின் ஜெகநாதன்
- செல்வி. அன்னாள் ஆசீர்வாதம்
- செல்வி. சித்ரா ராஜன்
- செல்வி. பியூலா ஜெயக்குமார்
- செல்வி. சுஸ்மிதா செல்வதாஸ்
- செல்வி. ரீமாறோஸ் எபெநேசர்
- செல்வி. எவாஞ்சலின் சாமுவேல்
- செல்வி. மீனா குமாரி சுகுமார்
- செல்வி. தெபோரா ஆமோஸ்
- செல்வன். பிரவீன்குமார் சாமுவேல்
- செல்வன். டினோ ஷைஜு ஜேம்ஸ்
- செல்வன். ஜோ நிர்மல் டென்சிங்
- செல்வன். மில்டன் பக்தராஜ்
- செல்வன். கதிரவன் சுகுமார்
- சகோதரி. சித்ரா மேரி சாம்சன்
- சகோதரி. மரிய குளோரி தாஸ்
- சகோதரி. ஆனந்தி சாலொமோன்
- சகோதரி. சஜின் ஜீவா
- சகோதரி. எலிசபெத் ஸ்டாலின்
- சகோதரி. ஜெயா கொம்மையன்
- சகோதரி. ஜெகதாம்பாள் ராஜவேல்
- சகோதரி. குமுதினி வில்சன்
- சகோதரி. மெற்றில்டாராணி பீட்டர்
- சகோதரி. சுகந்தி தம்புகுமார்
- சகோதரி. சவரியம்மா அந்தோனிசாமி
- சகோதரி. கீதா ஜாண்சன்
- சகோதரி.குளோரி ஆல்ப்ஸ்ஜேம்ஸ்
- சகோ. ஜோண்ஸ் செல்வசிங்
- சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ்
- சகோ. எபெநேசர்
- சகோ. ரிச்சர்ட் சாலொமோன்
- சகோ. டோனி ராமமூர்த்தி
- சகோ. ஜோண்ஸ் ராஜ்
- சகோ. கலியமூர்த்தி
- சகோ. சஜின் ராஜன்
- சகோ. வெங்கடேசன்
- சகோ. தர்மர்
- சகோ. டேனியல் மாணிக்கம்
- சகோ. கொம்மையன்
- சகோ. ஸ்டீபன். T
- சகோ. ராஜவேல்
- சகோ. சாமுவேல் ஐசக்
- சகோ. லாரன்ஸ்
- சகோ. ஆசீர்வாதம்

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. எபெநேசர்
- திருமதி & திரு. ஸ்டாலின்
- திருமதி & திரு. வில்சன். M
- திருமதி & திரு. எட்வின் சாம்
- திருமதி & திரு. கிரன் குமார்
- திருமதி & திரு. அந்தோனிசாமி
- திருமதி & திரு. ஆல்பர்ட் சிங்
- திருமதி & திரு. தாமஸ்
- திருமதி & திரு.ஆல்ப்ஸ்ஜேம்ஸ்
- திருமதி & திரு. கொம்மையன்
- திருமதி & திரு. ஜாண் மில்லர்
- திருமதி & திரு. ஈஸ்டர் ராஜ்
- திருமதி & திரு. ஆல்பர்ட். S
- திருமதி & திரு.ஜாண்போஸ்கோ
- திருமதி & திரு. பிரேம்குமார்
- திருமதி & திரு. பால் பாண்டியராஜ்
- திருமதி & திரு. ஜெயசேகர்
- திருமதி & திரு. எட்வர்ட் ராஜா
- திருமதி & திரு. சாம் தேவநேசன்

அவர் கன்மலையைத் தண்ணீர்த் தடாகமாகவும்; கற்பாறையை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார். _சங். 114:8

# மே 2013 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | செய்தி |
|---|---|
| 05-05-2013 | **சகோ. ஜெயசேகர்** |
| 12-05-2013 | **சகோ. ஜெகநாதன்** |
| 19-05-2013 | **சகோ. விசு** |
| 26-05-2013 | **சகோ. ஸ்டாலின்** |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 03-05-2013 | **சகோ. ஜசக்துரை** | **சகோ. ரவிச்சந்திரன்** |
| 10-05-2013 | MOTHERS' DAY | |
| 17-05-2013 | **உபவாச திருவிருந்து ஆராதனை** | |
| 24-05-2013 | **சகோ. ஜஸ்டின் சுந்தரராஜ்** | **சகோ. ஸ்டீபன்** |
| 31-05-2013 | **குடும்ப ஆராதனை** | |

சங்கிலி தொடர் ஜெபம்: 02-05-2013 மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை

முழு இரவு ஜெபம்: 09-05-2013 இரவு 10 pm முதல் காலை 2 am வரை

---

வாலிபர் கூடுகை: 17-05-2013, சகோ. சிவகுமார் இல்லம், மங்காஃப்

பெண்கள் கூடுகை: இடம், நேரம், தேதி பின்பு அறிவிக்கப்படும்.

கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்; அவர் ஆசீர்வதிப்பார்: -சங். 115:12

# அப். மத்தேயுவின் இரத்தசாட்சி

இயேசு கிறிஸ்துவின் சீஷர்களிலே யூதர்களால் மிகவும் வெறுக்கப்பட்ட பணியை செய்து வந்தவர் மத்தேயு ஆவார். ஆனால் மற்ற சீஷர்களைவிட அதிக கல்வியறிவில் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் எபிரேயம், அரமாயிக், கிரேக்கம், லத்தீன் மொழிகளை அறிந்திருந்தார். அல்பேயுவின் மகனாகிய யாக்கோபின் மூத்த சகோதரன்தான் மத்தேயு. இவருடைய பெற்றோர்கள் மிகவும் தூய்மையானவர்கள். இவர்கள் இயேசு கிறிஸ்துவின் உறவினரும் ஆவர். மத்தேயு என்பதற்கு தேவனுடைய ஈவு என்று அர்த்தமாம். இவர் கலிலேயாவைச் சேர்ந்த கப்பர்நகூமுக்கு அருகில் பிறந்தவர்.

கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் ரோம அரசு யூதர்களிடம் பலவிதங்களில் வரி வசூலித்து வந்தது. யூதர்கள் கடல் வழியாகக் கொண்டு செல்லும் பொருள்களுக்கும் ரோம அரசுக்குத் தேவையான வரியை செலுத்த வேண்டும். இந்த சுங்கவரியை வசூலிக்கும் பொறுப்பை தாங்களே எடுத்து செய்யும் அனுமதியை சிலர் பெற்றிருந்தார்கள். இவர்கள் ஆங்காங்கே வரி வசூலிப்பதற்கு ஆயக்காரர்களை நியமித்திருந்தார்கள். இவ்வாறு கப்பர்நகூம் பகுதியில் வரிவசூலிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஆயக்காரர்களில் ஒருவர்தான் மத்தேயு. இவர்கள் மக்களிடமிருந்து வசூலிக்கும் வரிப்பணத்தில் ஒரு பகுதியை தாங்களே வருமானமாக எடுத்துக் கொள்வார்கள். தமஸ்குவிலிருந்து அக்கோ செல்லும் முக்கியமான வாணிபப் பாதையில் கப்பர்நகூம் இருந்ததால் மத்தேயுவிற்கு போதுமான வருமானம் கிடைத்தது. மத்தேயு வரிவசூலிப்பதை தன் தொழிலாக நினைத்து நேர்மையாக செய்து வந்தார். மற்றபடி யூத பழக்க வழக்கங்களை கைவிடவில்லை. ஆனால் சகேயு உட்பட்ட மற்ற சுங்கவரி அலுவலர்கள் ரோம பேரரசனுக்கு நம்பிக்கையுள்ளவராக நடந்து கொள்ளவில்லை. அரசனுக்கு கொடுக்க வேண்டிய தொகையைவிட தாங்கள் அதிகமாக பயனடையும் வகையில் பேராசையுடன் அதிக வரி வசூலிக்கும் பணியில் ஈடுபட்டார்கள். இவர்கள் ரோமர்களின் கைக்கூலிகளாக செயல்பட்டு ஆயக்காரர்களின் பணியை ஏற்றார்கள். யூதர்கள் ஆயக்காரர்களை வெறுத்து... அவர்களை கொலைகாரர்கள், கொள்ளையர்களோடு சமமாக எண்ணினார்கள். வரிவசூலிக்கும் ஆயக்காரன் சாட்சி சொல்லவோ, நியாயம் தீர்க்கவோ தகுதியற்றவன். இறைவழிபாட்டில் கூட விலக்கி வைத்தார்கள். லூக். *18:10—13* —ல் வேதம் இதை தெளிவாக சொல்கிறது, இரண்டு மனுஷர்கள் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்திற்கு போனார்கள். ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்றுஹ தேவனே நான் பறிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும் இந்த ஆயக்காரனைப் போலவும் இராதபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன். என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன்மார்பிலே அடித்துக்கொண்டு தேவனே!பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். வரிவசூலிப்பவர்களாக இருந்த ஆயக்காரர்கள் மனந்திரும்பினால் கூட அவர்களை மதிப்பது கடினமாகவே இருந்தது.

கர்த்தர் கபடற்றவர்களைக் காக்கிறார்; நான் மெலிந்துபோனேன்; அவர் என்னை இரட்சித்தார். –சங். 116:6

ஆயக்காரர்களை பொதுமக்களும் வெறுத்தார்கள். ஏனென்றால் இவர்கள் பேராசையினால் நேர்மையற்றவர்களாக நடந்து, வற்புறுத்தி, அதிக பணம் வசூலித்தார்கள்.
யோவான்ஸ்நானகன் கூட ஞானஸ்நானம் கொடுக்கும்போது ஆயக்காரர்கள் வருகிறதைக் கண்டு அவர்களைப் பார்த்து தீர்க்கதரிசனமாக உங்களுக்குக் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் வாங்காதீர்கள் என்று கூறினார்.

இப்படி பொதுமக்களால் வெறுக்கப்பட்ட ஆயக்காரனாகிய மத்தேயு ஒருநாள் சுங்கச்சாவடியில் அமர்ந்திருப்பதை இயேசு கண்டார். ஆயக்காரனாகிய மத்தேயும் நேருக்கு நேர் இயேசுவின் முகத்தைக் கண்டார். மற்ற மக்கள் மத்தேயுவை பார்க்கும் போது இவன் ஒரு ஆயக்காரன், பாவி, துரோகி, வஞ்சகன் என்றுதான் பார்த்து வந்தார்கள். ஆனால் ராஜாவாகிய இயேசு கிறிஸ்துவின் தூய்மை நிறைந்த அந்த ஒரு பரிசுத்தமான பார்வை மத்தேயுவின் உள்ள அழுக்கை நீக்கியது. ராஜாவாகிய இயேசு மத்தேயுவை பார்த்து என்னை பின்பற்றி வா என்றார். உடனடியாக மத்தேயு இன்பக்கடலில் மூழ்கினார். இயேசுவின் அழைப்பைப் பெற்ற உடனே அனைத்தையும் விட்டு விட்டு இயேசுவுக்கு பின் சென்றார். மத்தேயு இதுவரை அனுபவிக்காத ஈடு இணையற்ற உயர்ந்த இயேசு கிறிஸ்துவின் கிருபையை அனுபவித்தார். மத்தேயு தான் பெற்ற மகிழ்ச்சியை மற்றவர்களுக்கு நற்செய்தியாய் சொல்வதற்காக தன்னுடைய வீட்டிலே மிகப்பெரிய விருந்து ஒன்றை ஆயத்தம் பண்ணினார். அதில் இயேசு கிறிஸ்துவையும் அவருடைய சீஷர்களையும் தவறாமல் அழைத்திருந்தார். இந்த விருந்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாவிகளோடும் ஆயக்காரர்களோடும் அமர்ந்து விருந்து உண்டார். இதைக் கண்ட பரிசேயர்கள் பொறாமை கொண்டு குறை கூறத்தொடங்கினார்கள். ஆனால் மத்தேயு உள்ளான மகிழ்ச்சியோடும் நன்றி உணர்வோடும் காணப்பட்டார். இயேசு கிறிஸ்துவும் இந்த விருந்தில் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இயேசு கிறிஸ்துவோடு ஊழியம் செய்த பன்னிரண்டு சீஷர்களில் மத்தேயும் யோவானும் இயேசுவோடு அனுபவித்த அனுபவங்களை நமக்கு சுவிசேஷமாக அளித்துள்ளார்கள். அப். மத்தேயு தன்னுடைய சுவிசேஷத்தை எழுதும் போது தனது பெயரை மத். *10:3* —ல் ஆயக்காரனாகிய மத்தேயு என்றே தன்னைத் தாழ்த்தி குறிப்பிடுகிறார். அதுமட்டுமல்ல தன்னைப்பற்றி மேன்மையாக எந்த ஒரு காரியமும் குறிப்பிடவில்லை. இயேசுவின் அப்போஸ்தலர்கள் எவ்வளவு தாழ்மையுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் என்று இதனால் நாம் அறிந்து கொள்ளமுடிகிறது. நாமும் அவருடைய பிள்ளைகளாக இருப்பதனால் கர்த்தருக்கு முன்பாக மட்டுமல்ல எல்லா மனிதர்களுக்கு முன்பாகவும் தாழ்மையுள்ளவர்களாய் நடந்து கொள்ள வேண்டியதும் அவசியமல்லவா.

அப். மத்தேயு யூதாவில் தன் சொந்த நாட்டு மக்களுக்கு பதினைந்து ஆண்டுகள் நற்செய்தி அறிவித்தார். பிறகு பாரசீகத்தில் ஊழியம் செய்தார். இதன் பின்னர் எகிப்திலும் ஆப்பிரிக்காவில் உள்ள எத்தியோப்பாவிலும் ஊழியம் செய்தார். அப்பொழுது பிலிப்பு ஞானஸ்நானம் கொடுத்த எத்தியோப்பியன் வீட்டில் தங்கினார். அங்குள்ள எத்தியோப்பிய மக்களை இரண்டு மந்திரவாதிகள் தங்களுடைய தீய சக்தியால் அடிமைப்படுத்தி

வைத்திருந்தார்கள். அப். மத்தேயு அந்த மந்திரவாதிகளை அங்கிருந்து விரட்டி மக்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார். இவர் எகிப்தில் ஊழியம் செய்தபோது எகிப்து அரசனின் மரித்துப் போன மகனை உயிரோடு எழுப்பினார். அங்கு குஷ்டரோகியாய் இருந்த இபிஜெனியா என்ற இளவரசியை குணமாக்கினார்.

அப்போஸ்தலராகிய பரிசுத்த மத்தேயு எத்தியோப்பியாவிலும் எகிப்திலும் மூன்று ஆண்டுகள் ஊழியம் செய்தார். கி.பி 90 – ம் ஆண்டில் தொர்மீயனின் ஆளுகையின் கீழ் இருக்கும் போது போர்வாளால் வெட்டப்பட்டு இரத்த சாட்சியாய் மரித்தார். அதனேஷியஸ் என்ற துறவி இவரது எலும்புகளை எடுத்து இத்தாலியில் உள்ள சாலர்னே என்ற இடத்திலுள்ள ராபர்ட் கியஸ்கார்டோ என்ற பிரபுவிடம் கொடுத்தார். அவர் அந்த சாலர்னே என்ற இடத்திலே மிகப் பெரிய ஆலயத்தைக் கட்டி அப். மத்தேயுவின் எலும்புகளை பாதுகாப்பாக வைத்தார். இன்றும் அப்போஸ்தலராகிய பரிசுத்த மத்தேயுவின் கல்லறை அங்கு இருக்கின்றது.

**அன்புள்ள சகோதரன்**
**யேசுநாயகம்**

## CHILDREN THOSE WHO WROTE ANSWERS

Jainy
Jessly
Lydia. A
Sharon Keerthana
Helen Prarthana
Hepsibha
Roshan
Prince Joseph
Sharon Grace
Priscilla
Angeline Priscilla
Raeshma
Sarah Grace
Geona Shamy
Joseph Prince

## சபையின் 2013-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

# “பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது”

ரோமர். **6:14**

மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும்; கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். –சங்.118:8

# யாரைத் தேடுகிறாய்!

இன்றைய உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒன்றைத் தேடுகிறார்கள். நான் எதையும் தேடவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. நாம் அறியாமலே எதையோ தேடிக் கொண்டிருக்கிறோம். சிலர் மற்றவர்களிடத்தில் என்ன தவறு இருக்கிறது என்று கண்டு பிடிப்பதில் கில்லாடிகள். தங்கள் கண்களில் உத்திரத்தை வைத்துக் கொண்டு பிறர் கண்களில் இருக்கும் துரும்பைப் பார்த்து நகைக்கும் மூடர்கள் தான் இன்று எத்தனை பேர்! தேவனை தேடுவதற்குக்கூட நேரமில்லை என்று சொல்லி இயந்திரமாக ஊரைச் சுற்றிவரும் ரோபோட் மனிதர்கள் பெருகி வருகின்ற காலம் இது. தேவனோடு உறவாடுவது என்பது இவர்களுக்கு ஒரு கேள்விக்குறி. இவர்களை பார்த்துதான் ஒரு ஞானி சொன்னான்... “A man who is too busy to pray is busier than God wants him to be”. இப்படியே சொல்லிக் கொண்டு போனால் பட்டியல் முடியாது. மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் எதையாவது ஒன்றை தேடி நேரத்தை செலவிடுகிறான். பேர், புகழ், பெருமை, பணம், பதவி, அந்தஸ்து, அதிகாரம்.... என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆனால் ஆண்டவராகிய இயேசு தேடச் சொல்வதோ.... **““முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்””** (மத். 6:33) என்று சொல்லுகிறார். தாவீது தேவனுடைய மகிமையையும் அவருடைய பிரசன்னத்தையும் நாடினான். கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையை பார்க்கும்படியாகவும் அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும் நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன் (சங். 26:4). தேவனை தேடுவதில் ஒரு நாளும் சோர்ந்து போகாதிருங்கள். **““தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்””** (யாக். 4:8). உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது அவரைக் கண்டடைவாய் (உபா. 4:29). அவரை தேடும்போது நம் வாழ்வில் காணப்படும் பயங்கள் மறையும், ஆசீர்வாதங்கள் பெருகும். **““நான் கர்த்தரை தேடினேன், அவர் எனக்கு செவிகொடுத்து என்னுடைய எல்லா பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்””** (சங்.34:4). **““சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது””** (சங். 34:10). ஆகவே கர்த்தரை தேடுவோமாக, ஆமென்.

**கிறிஸ்துவுக்குள் அன்புள்ள**

**சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்**

---

## போ அல்லது அனுப்பு

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. சிவகுமார் - போன்: 94494541



## சரியாய் பதில் சொன்னால் தானே பரிசு!

( தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும் )

1. குத்து விளக்கு எந்த எண்ணெயினால் எரிய வேண்டும்?
2. ஆரோனின் குமாரராகிய நாதாபும், அபியூவும் எதனால் செத்தார்கள்?
3. ஐம்பதாவது வருஷத்தின் பெயர் என்ன?
4. மாம்சத்தின் உயிர் எதில் இருக்கிறது?
5. தேசத்தின் வெள்ளாண்மையை அறுக்கும் போது சிந்திக் கிடக்கிற கதிர்களை என்ன செய்ய வேண்டும்?
6. புசிக்கத்தக்க மிருகங்கள் எவைகள்?
7. ஆரோனும் அவன் குமாரரும் எத்தனை நாட்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்?
8. பஸ்கா பண்டிகை எப்போது கொண்டாடப்படுகிறது?
9. பலி செலுத்த ஆட்டுக் குட்டியைக் கொண்டுவர சக்தியில்லாதவன் வேறு எவைகளை பலி செலுத்தக் கொண்டுவர வேண்டும்?
10. அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் என்ன செய்யப்பட வேண்டும்?
11. ஆரோனின் வஸ்திரத்தில் மார் பதக்கத்தில் எவைகள் வைக்கப்பட்டது?
12. யாரை சிறுமை படுத்தக் கூடாது?
13. படைக்கும் போஜன பலி எதைக் கொண்டு சாரமாக்கப்பட வேண்டும்?
14. ஆரோன் அபிஷேகம் பண்ணப்படும் நாளில் அவனும் அவன் குமாரரும் படைக்க வேண்டிய மாவின் அளவு என்ன?
15. கர்த்தருக்கு இடும் தகனங்களில் மகா பரிசுத்தமானது எது?

குறிப்பு:- வேதாகமத்தில் லேவியராகமத்தில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வரும் 17-05-2013 தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

---

## ஒண் மினிட் ப்லீஸ்



உங்களுக்கு கர்த்தர் தந்த பாடல் பாடக்கூடிய மற்றும் இசைக்கருவி மீட்டக் கூடிய தாலந்தை கர்த்தருக்குப் பயன்படுத்தி, கர்த்தரின் ஆசீரைப் பெற ஆவல் உள்ளவர்கள் நம் சபையின் பாடற்குழு பொறுப்பாளர் சகோ. ஐசக்துரையை (66015503) அணுகுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். தேவைப்பட்டால் வாகனமும் ஒழுங்கு செய்யப்படும்.

---

நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.

சகோ. ரவிஜாண் பீட்டர் _ போன்: 99460225

என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்குச் செவிகொடுத்தார். _சங். 120:1

## ஏப்ரல் மாதக் கேள்விகளுக்கு பதில்கள்



1. இரண்டு மகன்கள் (யாத். 18:3 – 4)
2. பத்து முறை (ஆதி. 31:41)
3. சீனாய் மலை (யாத். 19:20)
4. போத்திபார் (ஆதி. 39:5)
5. மீதியான் (யாத். 3:1)
6. சத்தமிட்டு அழுதான் (ஆதி. 45:2)
7. மோசே – 80, ஆரோன் – 83 (யாத். 7:7)
8. நாற்பது நாட்கள் (ஆதி. 7:12)
9. தலைக்கு ஒரு ஓமர் அளவு (யாத். 16:16)
10. கோடா கோடியாய் பெருகுவாயாக (ஆதி. 24:60)
11. இருக்கிறவராகவே இருக்கிறேன். (யாத். 3:14)
12. சித்திம் மரத்தால். நீளம் – 2.5 முழம், அகலம் – 1.5 முழம், உயரம் – 1.5 முழம். (யாத். 37:1)
13. அரண்மனை அதிகாரி / எகிப்து தேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன். (ஆதி. 41:40, 41)
14. சிப்பொராள், பூவாள் (யாத். 1:15)
15. பெலிஸ்தருடைய தேசம் (ஆதி. 21:34)

## ஏப்ரல் மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்



☆Sis. ஜெபா
☆Sis. பத்மினி
☆Sis. ஜோன் அசோக்குமார்
☆Sis. அனிதா தாஸ்
Sis. பிரியா பிரேம்குமார்
Sis. மரகதம் ஸ்டீபன்
Sis. லைசா பொன்னையன்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. ராதா இவாஞ்சலின்
Sis. குமுதினி வில்சன்
Sis. டஃப்னி ஜெபசிங்
☆Bro. பக்தராஜ்
Bro. இம்மானுவேல்
Bro. ஆரோக்கியராஜ்
Bro. ரெமி ஜார்ஜ்
Bro. லூர்துசாமி
☆Sis. விக்டோரியா ராஜன்
☆Sis. ஜரின் சில்வியா ஆல்பர்ட்
☆Sis. செலின் டேவிட்
☆Sis. மெர்ஷெலின் ஏசுரெத்தினம்
Sis. கீதா ஜெயக்குமார்
Sis. ஹேனா எசேக்கியேல்
Sis. ஜீனா சதீஸ்குமார்
Sis. ஷர்மிளா ஸ்ரீனிவாசன்
Sis. ஹெப்சி சாம்
Sis. சுகந்தி தம்புகுமார்
☆Bro. ஜாண்
☆Bro. ஆல்பர்ட்
Bro. ஜாண்சன்
Bro. லாசர் ராஜாமணி
Bro. அருள்மணி

☆ - இவர்கள் சரியாய் பதில் எழுதியவர்கள்

கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்: அவர் உன் ஆத்துமாவைக் காப்பார். -சங். 121:7

மறக்கமுடியுமா!

# மாம(பு)னிதர் ஜாண் எலியட்

## (1604 – 1690)

ஜாண் எலியட் என்ற தேவ ஊழியரைப் பற்றி அநேகருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. வெறுத்தொதுக்கப்பட்ட மக்கள் கூட்டத்திற்காக அமரிக்கையாக வாழ்ந்து ஆண்டவருக்காக அரிய காரியங்களை அவர்கள் மத்தியில் செய்தவர் இவர். அமெரிக்காவிலுள்ள மசாசுசெட்ஸ்பகுதியிலுள்ள செவ்விந்தியர் நடுவில்மிஷனெரியாக அவர் பணி செய்தார். 16–ம் நூற்றாண்டில் அமெரிக்காவைக் கண்டு பிடித்து இங்கிலாந்து தேசத்திலிருந்தும் மற்றும் ஐரோப்பா தேசங்களிலிருந்தும் மக்கள் அங்கே குடி–யேறின நாட்கள் அவை. அப்பகுதியில் குடியேறிய வெள்ளையர்கள் அங்கிருந்த பர்வ குடிகளான செவ்விந்தியர்களை காட்டுமிராண்டிகள் எனவும் நாகரீகம் அறியாதவர்கள் என்றும் கூறி வெறுத்தனர். அவர்களை தங்கள் குடியிருப்புகளிலிருந்து ஒதுக்கியும் வைத்து இருந்தனர். அவர்களுடன் பேசுவதை உறவு வைத்துக்கொள்வதை அருவருப்பாக எண்ணினர். ஒருசிலர் அவர்களை பேய்கள் என்றுகூட எண்ணினர். ஆனால் ஜாண் எலியட்டுக்கோ அந்த செவ்விந்தியர்கள் கடவுளைக் கண்டறிய வேண்டிய தேவையிலிருக்கும் ஆத்துமாக்களாகத் தென்பட்டனர். பாவியாகிய என்னை மீட்க பரலோகம்விட்டு தேவன் இந்த உலகிற்கு வந்தார் நானும் இம்மக்களுக்கு அந்த இயேசுவைத் தர எந்த தியாகத்திற்கும் அஞ்சக்கூடாது என்ற எண்ணம் கொண்டார். எனவே ஜாண் எலியட் அந்த செவ்விந்தியர்களை நேசித்து அவர்களுடன் நெருங்கிப் பழகி நேசம் காட்டினார். அந்த நேசத்தின் மூலம் ஆத்ம நேசர் இயேசு கிறிஸ்துவை அந்த செவ்விந்தியர்களுக்கு அறிவிக்கத் தீவிரமாய் முயற்சித்தார்.

1604–ம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள விட்ஃபோர்டு என்ற இடத்தில் பிறந்த இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஜீசஸ் கல்லூரியில் பயின்றார். தனது பட்டப்படிப்பிற்குப் பின் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார். அதே பள்ளியில் பணிபுரிந்த தாமஸ் ஹுக்கர் என்பவர் அவ்வேலையை விட்டு அமெரிக்காவிற்கு ஊழியத்திற்காக சென்றார். தாமஸ் ஹுக்கரின் வாழ்வினால் கவரப்பட்டிருந்த ஜாண் எலியட்டும் அவரையே பின்பற்றி 1637–ம் ஆண்டு அமெரிக்காவிற்கு மிஷெனரியாகச் சென்றார். செவ்விந்தியரான ஜோசப் நெசு என்பவர் உதவியுடன் செவ்விந்தியர்களின் மொழியைக் கற்றுத்தேர்ந்தார். 2 வருடத்திற்குள் செவ்விந்திருக்ககு அவர்களது தாய் மொழியிலேயே பிரசங்கிக்கும் அளவுக்கு மொ–ழி ஞானம் பெற்றார். பிறகு 10 கற்பனைகள், கர்த்தருடைய ஜெபம் ஆகியவற்றை செவ்விந்தியரின் மொழியில் மொழிபெயர்த்தார். இதைக்கண்ட மற்ற ஆங்கிலேயர்கள் இவரைப் பார்த்து சிரித்தனர். என் ஆண்டவர் எனது தாய்மொழியில் பேசவேண்டும் என நான் எதிர்பார்க்கும்போது இந்த இந்தியர்கள் மட்டும் அப்படி எதிர்பார்ப்பதில் என்ன தவறு! வேதத்தை அவர்கள் தாய் மொழியில் தருவதே தனது அழைப்பு என புரிந்துகொண்டார். சார்லஸ் அருவி அருகில் வாழும் இந்தியர் மத்தியில் பணிபுரிய எண்ணி அப்பகுதியைத் தனது பணிக்களமாக ஏற்படுத்திக் கொண்டார். தங்களது தாய் மொழியில் கடவுளின் அன்பைச் சொல்லும் எலியெட்டின் பிரசங்கம் அநேக

கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன். –சங். 122:1

செவ்விந்தியரைக் கவர்ந்திழுத்தது. ஜாண் எலியட்டின் பணி மூலம் ஒரு கூட்ட மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டனர். அந்த மக்களின் வாழ்வில் மாற்றத்தைக்கண்ட ஏனைய மக்கள் அப்பகுதியை **""கிறிஸ்தவ நகரம்""** என்று அழைத்தனர்.

அந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் சமூக விரோதச் செயல்கள் அனைத்தையும் நிறுத்திவிட்டு தூய்மையுடனும் ஒற்றுமையுடனும் வாழத் தொடங்கியதோடு ஜாண் எலியெட்டுக்கு எல்லாக் காரியத்திலும் கீழ்ப்படிந்து வாழ்ந்தனர். ஆங்கிலேயஅரசின் சட்டமும் ஆங்கிலேயரின் கெடுபிடியும் சாதிக்கமுடியாத ஒன்றைக் கிறிஸ்துவின் சுவிசேஷம் மூலம் ஜாண் எலியெட் சாதித்துவிட்டார். ஒரு காலத்தில் மனிதப்பிசாசுகள் என்றும் மனிதமூளை கொண்ட ஓநாய்கள் என்றும் ஏனையோரால் அழைக்கப்பட்ட இம்மக்களுக்கு தானே **""ஜெபிக்கும் இந்தியர்கள்""** என்ற பெயர் ஏற்பட்டது. ஜாண் எலியெட் கிறிஸ்துவின் மாதிரியாக வாழ்ந்ததின் மூலம் நாட்டிக் பகுதியில் இந்தியரை ஆதாயப்படுத்திக் கொண்டார். அப்பகுதியில் வாழ்ந்த 800 பேரும் வேதத்தின் சட்டங்களை அவர்கள் வாழ்க்கையில் கைக்கொள்ளச் செய்து யாவரும் வியக்கும் ஒரு வாழ்க்கையை அவர்களை வாழச்செய்தார். அது மட்டுமல்ல மற்ற ஆங்கிலேயர்களால் புற ஜாதிகள் வேண்டப்படாதவர்கள் என ஒதுக்கித் தள்ளப் பட்ட செவ்விந்தியர்களை சுவிசேஷத்தால் செதுக்கி சீர்படுத்தி ஒளி வீசும் வைரங்களாக மாற்றி காண்பித்தார் ஜாண் எலியெட். ஆவிக்குரிய வாழ்வில் அவர்கள் உயர வழி காட்டியது மட்டுமல்லாமல் வாழ்க்கைத் தொழில்களையும் அவர்களுக்கு கற்றுக்கொடுத்தார்.

இவரது முக்கிய ஜெபங்களில் ஒன்று இவர்கள் மத்தியில் பள்ளிகளை ஏராளம் எழுப்பும் ஆண்டவரே என்பதாகும். அதன் விளைவாக செவ்விந்தியர்களுக்கு என ஒரு கல்லூரியும் பள்ளியும் ராக்ஸ்பரி என்ற இடத்தில் தோன்றியது. இந்தியர்களையே பயிற்றுவித்து ஆசிரியராக ஊழியக்காரராக ஏற்படுத்தினார். தனது பத்து வருடக் கடின உழைப்பாலும் தனது உதவியாளரான ஜாப்பின் உதவியாலும் முழு வேதாகமத்தையும் 1659 — ம் ஆண்டு மொழிபெயர்த்து முடித்தார். அமெரிக்காவிலுள்ள லண்டன் வேதாகமச் சங்கத்தில் முதல் முதலில் ஜாண் எலியெட் மொழிபெயர்ப்பு செய்த செவ்விந்தியருக்கான வேதாகமமே அச்சடிக்கப்பட்டது.

ஜாண் எலியெட்டின் 50 ஆண்டுகால ஊழியத்தால் 1100 பேர் கிறிஸ்துவின் அன்பினால் கவரப்பட்டிருந்தனர். 14 கிராமங்கள் மலர்ச்சி பெற்றது. 2 இடங்களில் ஆலயங்கள் எழும்பியது. செவ்விந்தியர் மொழியில் வேதாகமம் பிறந்தது. ஜாண் எலி யெட் செவ்விந்தியர்களை ஜெபிக்கும் மக்கள் எனவும் தேவன் ஆட்சி செய்யும் பூமி எனவும் பிறர் வியக்கும் வண்ணம் மாற்றத்தை நிகழ்த்திக் காண்பித்தார். இந்தியாவிலும் இவ்விதம் நாகரீகம் தெரியாதவர்கள் என மனிதர்களால் வெறுக்கப்படும் மக்கள் கூட்டம் ஏராளம் இருக்கிறது. அவர்களது வாழ்வும் ஜாண் எலியெட் போன்றவர்களுக்காக காத்திருக்கிறது.

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

## ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

**செயலாளர்**
சகோ. ஸ்டாலின்
66021072

**பொருளாளர்**
சகோ. விசு
97686317

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அந்புதராஜ்
60692485





### சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்

——(Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait

ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்

**Church website: www.ahmaditamilcongregation.org**
**Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com**

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048

Private Circulation only